சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை – 08.

ஒ.மு.எண். 6492/ஆ2/2022, நாள். 13.09.2022.

பொருள் பள்ளிக் கல்வி – சென்னை மாவட்டம் – 30 வது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு 2022 NCSC) அனைத்து வகை பள்ளி அறிவியல் வழிகாட்டி ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம் – 16.09.2022 அன்று வெள்ளிக்கிழமை அன்று நடைபெறுதல் – 10 முதல் 17 வயது வரை உள்ள 2 மாணவர்கள் மற்றும் ஒரு வழிகாட்டி ஆசிரியர் இப்பயிற்சி முகாமில் கலந்துக்கொள்ள கோருதல் – சார்பு.

பார்வை 1 சென்னை – 86, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்டச் செயலரின் 12.09.2022 நாளிட்ட கடிதம்.

*************

மேற்காண் பொருள் சார்ந்து பார்வையில் காணும் சென்னை – 86, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்டச் செயலரின் கடிதத்தில், இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத்துறை (DAT – GOVT. OF INDIA) ஆதரவுடன் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டினை (National Children's Science Congress) கடந்த 30 ஆண்டுகளாக தொடர்ந்து ஒருங்கிணைத்து வருகிறோம். எனவே, இந்த மாநாட்டில் கலந்துகொள்ள 10 முதல் 17 வயது வரை உள்ள குழந்தைகள் 2பேரும் அவர்களுக்கு வழிகாட்டியாக ஒரு அறிவியல் ஆசிரியரும் கலந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அம்மாநாட்டில் கலந்துக்கொள்ளும் அனைத்து மாணவர்கள் மற்றும் வழிகாட்டி ஆசிரியர்களுக்கும் இந்திய அரசின் சான்றிதழ் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த ஆய்வுகள் மாநில மற்றும் தேசிய மாநாட்டுக்கு தேர்வு செய்யப்படும். மேலும், அதில் பங்கேற்பது மாணவர்களுக்கு பெருமைமிகு வாய்ப்பாகும்.

ஆய்வினை மேற்கொள்ள வழிகாட்டி ஆசிரியர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக வட சென்னை கல்வி மாவட்டம் மற்றும் மேற்கு சென்னை கல்வி மாவட்டத்தில் உள்ள அரசு / சென்னை / அரசு உதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஒரு அறிவியல் ஆசிரியரை தவறாமல் கீழ்க்காண் பயிற்சியில் கலந்துக்கொள்ள அனுப்பிவைத்திடுமாறு அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் உண்டு உறைவிட, மாதிரிப் பள்ளி, மாற்றுத் திறனாளிகளுக்கான உள்ளிட்ட சிறப்பு வகைப் பள்ளிகளிலிருந்தும் ஆய்வுகள் செய்யும் வகையில் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சார்ந்த ஆசிரியர்களை ஊக்கப்படுத்தி அனுப்பிவைத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பயிற்சி நடைபெறும் நாள் : 16.09.2022

பயிற்சி நடைபெறும் இடம் : கேரள வித்யாலயா மேல்நிலைப் பள்ளி,

903, ஈ.வெ.ரா. பெரியார் சந்து,

ஈ. வெ. ரா. பெரியார் சாலை,

கீழ்ப்பாக்கம், சென்னை – 84

பயிற்சி நடைபெறும் நேரம்: காலை 10.00 மணி முதல் பிற்பகல் 3.30. வரை

எனவே, மேற்காண் பயிற்சியில் மேற்காண் கல்வி மாவட்டங்களில் உள்ள அரசு / சென்னை / அரசு உதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு ஒரு ஆசிரியர் வீதம் அனுப்பிவைக்கத்தக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு வட சென்னை மற்றும் மேற்கு சென்னை மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பம் XXXXXXXX.
முதன்மைக் கல்வி அலுவர்
சென்னை – 08.

பெறுநர்
அனைத்து அரசு/சென்னை/அரசு உதவிபெறும்
தொடக்க/நடுநிலை/உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்,
சென்னை மாவட்டம்.

நகல்

1. கல்வி அலுவலர் (பெருநகர மாநகராட்சி), சென்னை – 03. அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது. (தங்கள் ஆளுகைக்குட்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கும் தக்க நடவடிக்கைக்காக அனுப்பிவைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்)
3. சென்னை – 86, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்டச் செயலர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.